SELECTIONS

FROM THE

HOLY SCRIPTURES;

CONTAINING

GENESIS, EXODUS, PSALMS, LUKE, ACTS,
ROMANS, AND FIRST AND SECOND
EPISTLES OF JOHN.

சத்தியவேதப்பிரிவு.

இதிலே

மோசே யெழுதின முதலாம் இரண்டாம் ஆகமங்களும்,
சங்கீதப் புஸ்தகமும்,
லூக்காசுவிசேஷமும், அப்போஸ்தலர் நடபடிகளும், உரோ
மருக்கெழுதப்பட்ட நிருபமும், யோவானெழுதின முத
லாம் இரண்டாம் நிருபங்களும்
அடங்கியிருக்கின்றன.

கி. பி. ௲௮௱௪௰-ஆம்-லே
சென்னபட்டணத்திலச்சுப் பதிப்பிக்கப்பட்டது.

MADRAS:
PRINTED FOR THE MADRAS AUXILIARY BIBLE SOCIETY, AT THE
AMERICAN MISSION PRESS.
1840.

Kirchenbibliothek

மோசேயெழுதின

முதலாம் ஆகமம்.

க. அதிகாரம்.

ஆதியிலே பராபரன் வானத்தையும் பூமியையுஞ் சிருட்டித்தார்.

உ. பூமியோவென்றால் ரூபமற்றதும் வெறுமையுமாயிருந்தது, ஆழத்தின்மேல் இருளுமாயிருந்தது, [illegible] பராபரனுடைய ஆவி தண்ணீர்களின்மேலே அசைவாடிக்கொண்டிருந்தார்.

ங. பராபரன் வெளிச்சமுண்டாகக்கடவதென்றார், அப்பொழுது வெளிச்சமுண்டாயிற்று.

ச. பராபரன் வெளிச்சத்தை நல்லதென்று கண்டார், வெளிச்சத்தையும் இருளையும் பராபரன் வெவ்வேறாய்ப் பிரித்தார்.

ரு. பராபரன் வெளிச்சத்துக்குப் பகலென்று பேரிட்டார், இருளுக்கோ இராவென்று பேரிட்டார், இப்படியே சாயங்காலமானதிலும் விடியற்காலமானதிலும் முதலாம் நாளுண்டாயிற்று.

சு. பிற்பாடு பராபரன் தண்ணீர்களுக்கு நடுவாக ஆகாயவிரிவுண்டாகக்கடவதென்றும், அது தண்ணீர்களுக்குந் தண்ணீர்களுக்கும் பிரிவுண்டாகக்கடவதென்றுஞ் சொன்னார்.

எ. அப்படியே பராபரன் ஆகாயவிரிவையுண்டுபண்ணி ஆகாயவிரிவுக்குக் கீழாயிருக்கிற தண்ணீர்களுக்கும், ஆகாயவிரிவுக்குமேலாயிருக்கிற தண்ணீர்களுக்கும் பிரிவுண்டாக்கினார், அது அப்படியேயாயிற்று.

அ. ஆகாய விரிவுக்குப் பராபரன் வானமென்று பேரிட்டார், இப்படியே சாயங்காலமானதிலும் விடியற்காலமானதிலும் இரண்டாம் நாளுண்டாயிற்று.

கூ. பிற்பாடு பராபரன் வானத்தின் கீழிருக்கிற தண்ணீர்களொரு இடத்திலே சேரவும் வெட்டாந்தரை காணப்படவுங்கடவதென்றார், அது அப்படியேயாயிற்று.

ய. பராபரன் வெட்டாந்தரைக்குப் பூமியென்றுஞ் சேர்ந்த தண்ணீர்களுக்குச் சமுத்திரங்களென்றும் பேரிட்டார், பராபரன் அது நல்லதென்று கண்டார்.

யக. அப்பொழுது பராபரன், பூமியானது புல்லையும் விதையைப் பிறப்பிக்கிற பூண்டுகளையும், பூமியின்மேலே தன்னிலே தங்கள் விதையையுடைய கனிகளைத் தங்கள் சாதியின்படியே கொடுக்குங் கனிவிருட்சங்களையும் முளைப்பிக்கக் கடவதென்றார், அது அப்படியேயாயிற்று.

யஉ. பூமி தங்கள் தங்கள் சாதியின்படியே புல்லையும் விதையைப் பிறப்பிக்கிற பூண்டுகளையும், தங்கள் தங்கள் சாதியின்படியே தங்களிலேதங்க

னவிதைகளையுடைய கனிகளைக் கொடுக்கும் விருட்சங்களையும் முளைப்பித்தது, பராபரன் அது நல்லதென்று கண்டார்.

௰௩. அப்பொழுது சாயங்காலமும் விடியற்காலமுமானதிலே மூன்றாம் நாளுண்டாயிற்று.

௰௪. பிறபாடு பராபரன் பகலுக்கும் இரவுக்கும் வித்தியாசமுண்டாக்கத்தக்க வெளிச்சங்கள் வானமென்ற ஆகாய விரிவிலே உண்டாகக் கடவதென்றும், அவைகள் அடையாளங்களாகவுங் குறித்த காலங்கள் நாட்கள் வருஷங்களையுங் குறிக்கிறதற்காகவுமிருக்க,

௰௫. பூமியின்மேலே பிரகாசிக்கும்படிக்கு வானமென்ற ஆகாயவிரிவிலே வெளிச்சங்களாயிருக்கக்கடவதென்றுஞ்சொன்னார், அது அப்படியேயாயிற்று.

௰௬. பராபரன் பகலை ஆளப்பெரிதாயிருக்கிற வெளிச்சமும், இரவை ஆளச்சிறிதாயிருக்கிற வெளிச்சமுமாகிய இரண்டுபெரிய வெளிச்சங்களையும் நட்சத்திரங்களையும் உண்டாக்கினார்.

௰௭. அவைகளைப்பராபரன் பூமியின்மேற் பிரகாசிக்கவும்,

௰௮. பகலையும் இரவையுமாளவும், வெளிச்சத்துக்கும் இருளுக்கும் வித்தியாசமுண்டாக்கவும், வானமென்ற ஆகாய விரிவிலே வைத்தார், பராபரன் அது நல்லதென்று கண்டார்.

௰௯. அப்பொழுது சாயங்காலமும் விடியற்காலமுமானதிலே நாலாம்நாளுண்டாயிற்று.

௨௰. பிறபாடு பராபரன் தண்ணீர்களானது நிறைய உயிர்ப்பிராணிகளையும் பூமியின்மேல் ஆகாயவிரிவிலே பறக்கும்பறவைகளையுந்திரளாயசெனிப்பிக்கக் கடவதென்றார்.

௨௧. அப்படியே பராபரன் பெரிய திமிங்கலங்களையுந் தண்ணீர்களாற்சாதியாகத் திரளாயசெனிப்பித்த சகலவித நீர்ச்சுப்பிராணிகளையுஞ் சாதிசாதியாயிருக்கிற செட்டைகளுள்ள சகலவித பட்சிகளையுஞ் சிருட்டித்தார், பராபரன் அது நல்லதென்றுகண்டார்.

௨௨. பராபரன் அவைகளை ஆசீர்வதித்து நீங்கள் பலுகிப்பெருகிக் கடல்களிலுள்ள தண்ணீர்களை நிரப்புங்களென்றும், பறவைகள் பூமியிற்பெருகக்கடவதென்றுஞ் சொன்னார்.

௨௩. அப்பொழுது சாயங்காலமும் விடியற்காலமுமானதிலே ஐந்தாம்நாளுண்டாயிற்று.

௨௪. பிறபாடு பராபரன் பூமியானது சாதிசாதியான ஜீவசெந்துக்களாயிருக்கிற மிருகங்களையும் ஊர்வனங்களையும்பூமியின் காட்டுமிருகங்களையுஞ்சாதிசாதியாக எழும்பப்பண்ணக் கடவதென்றார், அது அப்படியே யாயிற்று.

௨௫. பராபரன் சாதிசாதியான பூமியின் காட்டுமிருகங்களையுஞ், சாதிசாதியான மிருகங்களையுஞ், சாதிசாதியான சகலபூமியின் ஊர்வனங்களையும் உண்டாக்கினார், பராபரன் அது நல்லதென்று கண்டார்.

௨௬. பிற்பாடு பராபரன் தம்முடையசாயலாக நம்முடையரூபத்தின்படியே மனிதனை உண்டாக்குவோமாக, அவர்கள் சமுத்திரத்தின் மச்சங்களையும், ஆகாயத்துப் பறவைகளையும், மிருகஜீவன்களையும், பூமியனைத்தையும், பூமியின்மேல் ஊருகிறசகல ஊர்வனங்களையும் ஆளக்கடவர்களென்றார்.

௨௭. அப்படியே பராபரன் மனிதனைத் தம்முடைய சாயலாகச் சிருட்டித்தார், அவனைப் பராபரனுடைய சாயலாகச் சிருட்டித்தார், ஆணும் பெண்ணுமாக அவர்களைச் சிருட்டித்தார்.

௨௮. அப்பொழுது பராபரன் அவர்களை ஆசீர்வதித்து நீங்கள் பலுகிப்பெருகிப் பூமியை நிரப்பப்பண்ணி அதைக் கீழ்ப்படுத்திச் சமுத்திரத்தின் மச்சங்களையும் ஆகாயத்துப் பறவைகளையும் பூமியின்மேல் நடமாடுகிற சகலமிருகஜீவன்களையும் ஆண்டுகொள்ளுங்களென்று பராபரன் அவர்களுக்குச் சொன்னார்.

௨௯. பின்னையும் பராபரன் சொன்னதாவது, இதோ, பூமியின்மீதெங்குமிருக்கிற விதைதருகிற சகலவித பூண்டுகளையும், விதைதருங் கனிமரங்களாகிய சகலவித விருட்சங்களையும் உங்களுக்குக் கொடுத்தோம், அவைகள் உங்களுக்கு ஆகாரமாயிருக்கக் கடவது.

௩௰. ஜீவப்பிராணனுள்ள பூமியிலுடைய சகலமிருகங்களுக்கும், ஆகாயத்திலுடைய சகலபறவைகளுக்கும், பூமியின்மேல் ஊருந்தவெல்லாவற்றிற்குஞ்சகலபச்சைப்பூண்டுபயிர்களையும், ஆகாரமாகக் கொடுத்தோமென்றார், அது அப்படியேயாயிற்று.

௩௧. அப்பொழுது பராபரன் தாமுண்டாக்கினவெல்லாவற்றையும்பார்த்தார், இதோ, மெத்தவும் நன்றாயிருந்தது, அப்படியே சாயங்காலமும்விடியற்காலமுமானதிலே ஆறாம் நாளுண்டாயிற்று.

௨. அதிகாரம்.

இந்தப்பிரகாரமாக வானமும்பூமியும் அவைகளுடைய எல்லாசேனையும் உண்டாக்கப்பட்டுத்தீர்ந்தது.

௨. பராபரன் உண்டாக்கின தம்முடைய கிரியையை ஏழாம்நாளிலே நிறைவேற்றின பிற்பாடு, அவர் தாமுண்டாக்கின தம்முடைய கிரியையையெல்லாம் முடித்தபின் ஏழாம்நாளிலே ஓய்ந்திருந்தார்.

௩. பராபரன் ஏழாம்நாளை ஆசீர்வதித்து அதைப்பரிசுத்தமாக்கினார், ஏதெனில் பராபரன் உண்டுபண்ணிச்சிருட்டித்த தம்முடைய கிரியையையெல்லாம் முடித்தபின், அதிலே ஓய்ந்திருந்தார்.

௪. பராபரனாகிய கர்த்தர் பூமியையும் வானத்தையும் உண்டாக்குகிற நாளிலே வானமும்பூமியுஞ் சிருட்டிக்கப்பட்ட பூர்வோத்தரங்கள் இவைகள்தான்.

௫. நிலத்திலுடைய சகலவித செடிகள் பூமியின்மேல் இன்னமிருந்ததில்லை, நிலத்திலுடைய சகலவித பூண்டுகளுமின்னமுளைத்ததில்லை, ஏனென்றால் பராபரனாகிய கர்த்தர் பூமியின்மேல் இன்னமழை

௫ இயேசு பராபரனுடைய குமாரனென்று விசுவாசிக்கிறவனேயொழியப் பின்னையார் லோகத்தைச் செயிக்கிறவன்.

௬ இயேசுகிறிஸ்துவாகிய இவரே தண்ணீரோடுமிரத்தத்தோடும் வந்தவர், தண்ணீரோடுமாத்திரமல்ல, தண்ணீரோடுமிரத்தத்தோடுந்தானே, ஆவிசத்தியமென்று ஆவியானவரேசாட்சிகொடுக்கிறவர்.

௭ ஏனெனில் வானத்திலே சாட்சி கொடுக்கிறவர்கள் மூவர், பிதா வார்த்தை பரிசுத்தஆவி இம்மூவரும் ஒன்றாயிருக்கிறார்கள்.

௮ பூமியிலே சாட்சிகொடுக்கிறவர்களும் மூன்றுண்டு, ஆவி தண்ணீர் இரத்தம் இம்மூன்றும் ஒன்றுக்கேயிருக்கிறது.

௯ நாம் மனுஷருடைய சாட்சியை ஏற்றுக்கொண்டால் பராபரனுடையசாட்சி அதிகமாயிருக்கிறது, பராபரனுடைய சாட்சியோவென்றால் தம்முடையகுமாரனைக்குறித்து அவர் கொடுத்த சாட்சிதானே.

௰ பராபரனுடைய குமாரனமேலே விசுவாசிக்கிறவன் இந்தச்சாட்சியைத் தனக்குள்ளே வைத்திருக்கிறான், பராபரனை விசுவாசியாதவன் அவரைப் பொய்யராக்கி வருகிறான், ஏனெனில் பராபரன் தம்முடைய குமாரனைக்குறித்துத் தந்தசாட்சியின்பேரில் விசுவாசியாதிருக்கிறான்.

௰௧ நித்தியசீவனைப் பராபரன் நமக்குத்தந்தாரென்றதும் இந்தச்சீவன் அவருடைய குமாரனுக்குள்ளிருக்கிறதென்றுமே அந்தச் சாட்சி.

௰௨ குமாரனையுடையவன் சீவனையுடையவன், பராபரனுடையகுமாரனில்லாதவன் சீவனில்லாதவன்.

௰௩ உங்களுக்கு நித்தியசீவனுண்டென்றதை நீங்கள் அறிந்து பராபரனுடையகுமாரனநாமத்தின்பேரில் விசுவாசிப்பதற்காக இதுகளைப் பராபரனுடையகுமாரனநாமத்தின்பேரில் விசுவாசிக்கிற உங்களுக்கெழுதினேன்.

௰௪ நாம் அவருடைய சித்தத்தின்படியே ஒருகாரியங் கேட்டால் நமக்குச் செவிகொடுக்கிறாரென்கிறதே நாம் அவரைநோக்கிப்பெற்றிருக்கிற தயிரியம்.

௰௫ நாம் எதைக்கேட்டாலும் நமக்குச் செவிகொடுக்கிறாரென்றதை அறிந்தோமானால் நாம் அவரிடத்திலே கேட்டவிண்ணப்பங்களைப் பெறுவோமென்று அறிந்திருக்கிறோம்.

௰௬ மரணத்துக்கு நேராயிராத பாவத்தை ஒருத்தன் தன்சகோதரன் செய்யக்கண்டால் வேண்டிக்கொள்ளக்கடவான், அப்போது அவனுக்குச் சீவனைத்தருவார், ஆருக்கென்றால் மரணத்துக்கு நேராயிராதபாவத்தைச்செய்கிறவர்களுக்குத்தானே, மரணத்துக்கு நேரானபாவமுண்டு அதினிமித்தம் வேண்டிக்கொள்ளச் சொல்லேன்.

௰௭ எல்லா அஞ்ஞாயமும் பாவந்தான், ஆனாலும் மரணத்துக்கு நேராயிராதபாவமுண்டு.

௰௮ பராபரனிற் பிறந்தவனெல்லாம் பாவஞ்செய்யாதிருக்கிறானென்கிறதை யறிவோம், பராபரனிற் பிறந்தவன் தன்னைக்காக்கிறான், ஆகையாற்பொல்லாங்கன் அவனைத்தொடான்.

௰௯ நாம் பராபரனாலுண்டானவர்களென்றும் லோகமெல்லாம் பொல்லாங்கனுக்குள் கிடக்கிறதென்றும் அறிந்திருக்கிறோம்,

௨௰ அன்றி பராபரனுடையகுமாரன் வந்து நாம் சத்தியமுள்ளவரை அறிவதற்காக நமக்குப் புத்தியைக் கொடுத்தாரென்றறிந்திருக்கிறோம், அவருடையகுமாரனாகிய இயேசுகிறிஸ்துவென்னப்பட்ட சத்தியமுள்ளவருக்குள்ளேயிருக்கிறோம், இவர் மெய்யான பராபரனும் நித்திய சீவனுமாயிருக்கிறார்.

௨௧ பிள்ளைகளே, உங்களை விக்கிரகங்களுக்கு விலக்கியாய்க்காருங்கள், ஆமென்.

அப்போஸ்தலனாகிய
யோவானுடைய
இரண்டாந்திருபம்.

நமக்குள் நிலைநிற்கிறதுமல்லாமல் என்றென்றைக்கும் நம்மோடே இருப்பதுமான சத்தியத்தின்நிமித்தம் மூப்பனாகிய நான்மாத்திரமல்ல, சத்தியத்தை யறிந்திருக்கிற அனைவரும் உண்மையாய்ச் சிநேகிக்கிற,

௨ தெரிந்துகொள்ளப்பட்ட அம்மாளுக்கும் அவளுடைய பிள்ளைகளுக்கும் எழுதுகிறதாவது,

௩ பிதாவாகிய பராபரனும் பிதாவின்குமாரனாகிய கர்த்தனான இயேசுகிறிஸ்துவினாலும் உங்களுடனே கிருபையும் இரக்கமும் சமாதானமும் சத்தியத்தோடும் சிநேகத்தோடேகூட இருக்கக்கடவது.

௪ உம்முடைய பிள்ளைகளிற் பிதாவினால் நாம் கற்பனையடைந்தபடி உண்மையிலே நடக்கிறவர்களை நான் கண்டதனால் மிகவுஞ்சந்தோஷப்பட்டேன்.

௫ இப்போதும் அம்மையே, நாம் ஒருத்தரையொருத்தர் சிநேகிக்கவேணுமென்று நான் உமக்குப்புதிதான கற்பனையாகவல்ல, ஆதிமுதலாய் நாம் அடைந்திருக்கிற கற்பனையாக எழுதி உம்மைவேண்டிக்கொள்ளுகிறேன்.

௬ நாம் அவருடைய கற்பனைகளின்படி நடப்பதே

அந்தச்சிநேகம, நீங்கள ஆதிமுதலாயக் கேட்டிருக்கிறபடி நடந்துகொள்ளவேண்டிய கற்பனையிதுவே.

௭ ஏனெனில மாமிசத்திலே வந்த இயேசுக்கிறிஸ்துவை யறிக்கைபண்ணாத அநேகம எத்தர் லோகத்திலே பிரவேசித்தார்கள, இப்படிக்கொத்தவனே எத்தனுமகிறிஸ்துவுக கெதிராளியுமா யிருக்கிறான.

௮ நாமதேடிக்கொண்டதுகளையிழந்து போகாமல நிறைந்த பலனைப்பெறும்படிக்கு எச்சரிக்கையாயிருங்கள.

௯ கிறிஸ்துவின போதகத்திலே நிலைநில்லாமல மீறிநடக்கிறவனெவனோ அவன பராபரனில்லாதவன, கிறிஸ்துவின போதகத்தில நிலைத்திருக்கிறவனுக்கே பிதாவுமுண்டு குமாரனுமுண்டு.

௰ ஒருத்தன உங்களண்டைக்கு இந்தப்போதகத்தைக் கொண்டுவராமல வந்தால அவனை உங்கள வீட்டிலே ஏற்றுக்கொள்ளாமலும அவனுக்கு வாழ்த்துதல சொல்லாமலுமிருங்கள.

௧௧ ஏனெனில அவனுக்கு வாழ்த்துதல சொல்லுகிறவன அவன துர்க்கிரியைகளுக்குப பங்காளனாகிறான.

௧௨ உங்களுக்கெழுத அநேககாரியங்களெனக்கிருந்தாலும கடுதாசியினாலும மையினாலும அதுகளை விவரிக்க நான மனதாயிருக்கவில்லை, உங்கள சந்தோஷம நிறைந்ததாயிருக்கும்படிக்கு உங்களண்டைக்கு முகமுகமாய வந்து பேசலாமென்று நம்பியிருக்கிறேன.

௧௩ தெரிந்துகொள்ளப்பட்ட உம்முடைய சகோதரியின பிள்ளைகள உம்மை வாழ்த்துகிறார்கள. ஆமென.